இலங்கையில் புதினப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

# நம்தேசம்
NAMDESAM

ஐக்கிய தேசியக் கட்சி வெளியீடு ✱ 532, காலி வீதி, கொழும்பு-3.

விலை சதம் 50 [வார இதழ்]
தொலைபேசி: 32236 - 37

மலர் 3 ● 9 - 4 - 1976 வெள்ளிக்கிழமை ● இதழ் 29

## அரசியல் அதிகாரிகள் அதிர்ஷ்டசாலிகள்

நாட்டில் உள்ள 22 மாவட்டங்களுக்கும் அரசாங்க ஆதரவாளர்களான எம். பி.க்கள் அரசியல் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டு அவர்களுக்குப் பண ஒதுக்கீடு விஷயத்தில் அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன அல்லவா? அவர்கள் உண்மையில் அதிர்ஷ்டசாலிகள்.

அவர்களை ''மினிப் பிரதமர்கள்'' என்று கூறி அவர்களுக்கு சேர்ட்டிபிக்கேட் கொடுத்திருக்கிறார் அமைச்சர் இலங்கரத்தின. மினிப் பிரதமர்கள் இனித் தனிக்காட்டு ராஜாக்கள்தான். அவர்களைப் பிடிக்க முடியாது!

# இலங்கைப் பிரதமர் எங்கே?

# செய்தி ஒன்றும் இல்லையே!

## பொதுப் பணத்தில் வெளிநாடு செல்பவர் விவரங்களை மக்களுக்கு அறிவிக்க வேண்டும்

**இலங்கைப் பிரதமர் இன்று எங்கே இருக்கிறார்? அதுபற்றிய செய்தி ஒன்றும் இல்லை. அவர் ஏன் இலங்கையை விட்டு வெளிநாட்டுக்கு ஓடிப்போனார் என்பது பலருக்கும் மர்மமாகவே இருக்கிறது.**

**பொதுப் பணத்தில் வெளிநாடு செல்லும் ஒரு பிரதம மந்திரி தாம் எதற்காகப் போகிறார், எங்கே போகிறார் எப்போது திரும்புவார் என்ற சகல விவரங்களையும் பொது மக்களுக்கு அறிவிக்கவேண்டியது அவசியமாகும்.**

இலங்கைப் பிரதமர் வெளிநாடு சென்று சுமார் ஒருமாத காலமாகிறது. அவர் இன்னும் இலங்கை திரும்பவில்லை. இன்று எந்த நாட்டில் அவர் இருக்கிறார், என்ன செய்கிறார் என்ற விவரம் ஒன்றும் பொது மக்களுக்கு அறிவிக்கப்படவில்லை.

ஒரு நாட்டின் பிரதமரைப் பற்றிய செய்தி அந்த நாட்டு மக்களுக்கே தெரியாமல் இருப்பது விநோதம் ஆகும். அது வேதனைக்கும் உரியது.

பிரதமர் யூகோஸ்லாவியாவுக்குப் புறப்பட்டுச் சென்றதாகக் கூறப்பட்டது. அவர் யூகோஸ்லாவியாவுக்குப் போனபோது அந்த நாட்டுத் தலைவர் மார்ஷல் டிட்டோ அங்கே இல்லை.

மார்ஷல் டிட்டோ அந்த சமயம் மெக்ஸிகோவுக்குச் சென்றிருந்தார். இலங்கைப் பிரதமர் தமது நாட்டுக்கு வருகிறார் என்று அவரை வரவேற்ற மார்ஷல் டிட்டோ காத்திருக்கவில்லை.

மெக்ஸிகோவிலிருந்து திரும்பிய டிட்டோ உடனடியாக மற்றொரு அரசாங்க விஜயத்தை மேற்கொண்டு சுவீடன் நாட்டுக்குச் சென்றுவிட்டார். அப்படியானால் நமது பிரதமர் யூகோஸ்லாவியாவில் யாரோடு பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறார்.

பிரதமர் இலங்கையில் இருக்காமல் வெளிநாட்டுக்கு ஓடிப்போனது ஏன்? இந்த மர்மம் இன்னும் துலங்கவில்லை

பிரதமர் தனிப்பட்ட ஒரு மனிதராக இருந்தால் அவர் எங்கே போகிறார், ஏன் போகிறார், போகிற இடத்தில் என்ன செய்கிறார், எப்போது தாய் நாடு திரும்புவார் என்ற கேள்விகளுக்கு எல்லாம் இடமில்லை.

பிரதமர் பதவி ஒரு பொதுச் சொத்து. அந்தப் பதவியில் இருப்பவர் பொது மனிதர் ஆகிவிடுகிறார்.

பிரதமரைப் பொது மக்களே தெரிவு செய்கிறார்கள்.

பிரதமர் பொதுப் பணத்திலேயே தனது பரிவாரங்களுடன் வெளி நாடுகளுக்குச் செல்கிறார்.

பிரதமர் வாழ்வதும் பொதுப் பணத்தில்தான்.

பிரதமருக்கு வேண்டிய சகல வசதிகளும் சுகபோகங்களும் பொதுப் பணத்திலேயே செய்து கொடுக்கப்படுகின்றன.

பிரதமர் வெளிநாடு ஒன்றுக்குச் சென்றால் அவர் அங்கே இந்த நாட்டு மக்களின் தலைவி என்ற வகையிலேயே அங்கே வரவேற்று உபசரிக்கப்படுகிறார்.

ஆகவே பிரதமர் பதவி வகிப்பவர் தாம் எங்கே போகிறார், எப்போது போகிறார், ஏன் போகிறார், போகும் இடத்தில் என்ன செய்வார், எப்போது சொந்த நாட்டுக்குத் திரும்புவார் என்பன போன்ற சகல விவரங்களையும் தமது எஜமானர்களான பொது மக்களுக்குத் தெரிவிக்க வேண்டியது அவருடைய நீங்காக் கடமை ஆகும்.

இலங்கைப் பிரதமர் அடிக்கடி வெளிநாடுகளுக்குப் போகிறார். வருடத்தில் பாதி நாட்களை அவர் வெளிநாடுகளிலேயே கழிக்கிறார். எதற்காக அவர் இப்படி வெளிநாடுகளுக்குச் செல்கிறார்.

ஒரு பிரதமர் சொந்த நாட்டில் இருந்து தனது அலுவல்களைச் செய்யாமல் வெளிநாடுகளுக்குச் சென்று நீண்ட நாட்களை அங்கே கழிப்பது கடமையில் தவறுவது ஆகாதா? இந்தக் கேள்வியையே பொது மக்கள் இன்று எழுப்புகிறார்கள்.

## கட்டுரைகள் கவிதைகள் தேவை

நம்தேசம் வார இதழில் பிரசுரிப்பதற்கு வாசகர்களிடமிருந்து காரசாரமான அரசியல் கட்டுரைகளும், இன்றைய ஆட்சியின் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டும் கவிதைகளும் வரவேற்கப்படுகின்றன.

நகைச் சுவையுடனும் அங்கதச் சுவையுடனும் எழுதப்படும் அரசியல் கட்டுரைகளும், கவிதைகளும் கூட விரும்பி ஏற்றுக் கொள்ளப்படும்.

இன்றைய அரசாங்கத்தின் சோஷலிஸம் போகிற நெறிகெட்ட போக்கையும், அரசாங்கப் பிரமுகர்களின் சுயநல நோக்கையும் சித்திரிக்கும் சிறுகதைகளுக்கும் நம்தேசத்தில் இடம் உண்டு.

ஆசிரியர்: நம்தேசம்,
ஸ்ரீகோதா,
532, காலி வீதி,
கொழும்பு-3.

## பீலிக்ஸின் விளக்கம் அடங்கிய பிரசுரம் அச்சானது எங்கே?

— என். எம்.

நிதி அமைச்சரும் நீதி அமைச்சருமான திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்காவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை சமீபத்தில் தேசிய அரச பேரவையில் விவாதிக்கப்பட்ட போது, திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா தமது விளக்கத்தை ஒரு பிரசுரத்திலிருந்து (நூல்) வாசித்தார் அல்லவா?

அந்தப் பிரசுரம் அச்சுப் பதிக்கப்பட்டது எங்கே என்று சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா கேட்கிறார்.

டாக்டர் என்.எம்.பெரேரா இது சம்பந்தமாக முன்னறிவித்தல் கொடுத்துள்ள கேள்விகள் தேசிய அரச பேரவை ஒழுங்குப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. கேள்விகளின் விவரம் வருமாறு:-

(1) தமக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை விவகாரத்தின் போது நிதி-நீதி அமைச்சர் ஒரு பிரசுரத்தை வாசிக்கவும் சபை உறுப்பினர்களுக்கு விநியோகிக்கவும் செய்தார். அந்தப் பிரசுரம் எங்கே அச்சுப் பதிக்கப்பட்டது.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

நம்தேசம்
NAMDESAM

9—4—1976

## மீண்டும் ரயில்கள் மோதல்

வீதியில் நாய்கள் ஒன்றோடொன்று சண்டை போட்டுக் கொள்வது போல இலங்கையில் ரயில்கள் அடிக்கடி ஒன்றோடொன்று மோதிக் கொள்கின்றன.

ரயில்கள் ஒன்றோடொன்று மோதிக் கொள்வதால் பல கஷ்ட நஷ்டங்கள் ஏற்படுகின்றன.

(1) பலர் மரணமடைகிறார்கள்.

(2 பலர் காயமடைகிறார்கள்.

(3) ரயில் பெட்டிகள் சேதமடைகின்றன.

(4) ரயில் பாதை பழுதடைகிறது.

(5 ரயில் போக்குவரத்து ஸ்தம்பிக்கிறது.

இத்தனை கஷ்ட நஷ்டமும் யாருக்கு? வரியிறுப்பாளர்களான சாதாரண பொது மக்களுக்கே ஆகும்.

கடந்த சனிக்கிழமை கந்தானைக்கு அருகில் பிரயாணிகள் ரயில் ஒன்றும் பண்டாரநாயக்கா விமான நிலையத்துக்கு எண்ணெய் ஏற்றிச் சென்ற ரயில் ஒன்றும் ஒன்றோடொன்று மோதிக் கொண்டுள்ளன.

இந்த மோதலில் ஒரு சாரதி உட்பட ஆறுவர் காயமடைந்துள்ளனர். கொழும்பு நீர்-கொழும்பு ரயில் சேவை பல மணி நேரம் ஸ்தம்பித்துப் போயிற்று.

இது பற்றி ஆட்சியாளர்கள் கவலைப்படுகிறார்களா? இல்லை.

மேலை நாடுகளில் ரயில் விபத்து நிகழ்வது அபூர்வம். அப்படி எப்போதாவது ரயில் விபத்து நடந்து விட்டால் அது பற்றிய விசாரணைகள் நடைபெறுவதற்கு முன்னரே ஒரு முக்கியமான கருமம் நடந்துவிடும். அதாவது ரயில்வேக்குப் பொறுப்பான அமைச்சர் தமது மந்திரிப் பதவியை ராஜிநாமாச் செய்து விடுவார்.

ஆனால் இலங்கையில்......?

ஒன்றல்ல, ஓராயிரம் ரயில் விபத்துகள் நடந்தாலும், பலநூறு பேர் ரயில் விபத்துக் காரணமாக மாண்டாலும், பல்லாயிரம் பேர் காயமுற்றாலும், லட்சக் கணக்கில் சேதம் ஏற்பட்டாலும், ரயில் சேவை நாள் கணக்கில் ஸ்தம்பித்தாலும் ரயில்வேக்குப் பொறுப்பான மந்திரி அசைய மாட்டார். அவருடைய மன உறுதியைப் பாராட்டலாமா என்று தோன்றுகிறதா?

யார் எக்கேடு கெட்டால் என்ன, நாட்டுக்கும் மக்களுக்கும் எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டால் என்ன, அதிர்ஷ்டவசமாகத் தமக்குக் கிடைத்த மந்திரிப் பதவியை நாளெல்லாம் பாதுகாத்துப் பவுசாக வாழ வேண்டும் என்பதே கூட்டு முன்னணி அரசாங்க மந்திரிகளின் இலட்சியம்.

அப்படி இல்லாவிட்டால் இந்த நாட்டில் எத்தனையோ ரயில் விபத்துகள் நடந்தும், எவ்வளவோ உயிர்ச் சேதமும் பொருள் சேதமும் ஏற்பட்டும் எந்த ரயில் மந்திரியாவது பதவியை ராஜிநாமச் செய்தாரா?

திரு.கே.பி. இரத்திநாயக்கா ரயில் மந்திரியாகப் பதவி ஏற்ற பின்னர் எத்தனை ரயில் விபத்துகள் ஏற்பட்டு விட்டன! ஒரே வாரத்தில் இரண்டு ரயில் விபத்துக்கள் ஏற்பட்டதுகூட உண்டு. அப்படியிருந்தும் அவர் பதவியை ராஜிநாமாச் செய்தாரா? இல்லை.

# இளைஞர் தாமும் வாழ்ந்து நாட்டையும் வாழ்விக்க

# ஐ. தே. கட்சி வழி செய்யும்

## ஜா-எல வேட்பாளர் மைக்கல் பெரேரா கூறுகிறார்

இளைஞர் தாமும் வாழ்ந்து நாட்டையும் வாழ்விக்க ஐ. தே. க. வழி செய்யும் என்று ஜா எல இடைத் தேர்தலில் போட்டியிடும் ஐ. தே. க. வேட்பாளர் திரு. ஜோசப் மைக்கல் பெரேரா கூறினார்.

ஜா-எலத் தொகுதியில் உள்ள கலுவாலையில் ஐக்கிய தேசியக் கட்சி கிளை ஒன்று ஆரம்பிக்கப்பட்ட போது நடைபெற்ற கூட்டத்தில் திரு மைக்கல் பெரேரா பேசினார். அவர் தமது பேச்சில் மேலும் கூறியதாவது:-

இந்த அரசரங்கம் கடந்த ஆறு வருடங்களாக எத்தனையோ தவறுகளைச் செய்து வருகிறது. அதற்கெல்லாம் சரியான பாடத்தைக் கற்பிக்க வேண்டும். ஜா-எலைத் தொகுதி வாக்காளர்கள் தமது வாக்குரிமையை மனச்சாட்சிக்கு மாறில்லாமல் உபயோகித்து இந்த அரசாங்கத்துக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசாங்கம் செய்த தவறுகளால் உணவுப் பிரச்சினை பெரும் பிரச்சினையாகி விட்டது. எத்தனையோ பேருக்கு உண்ண உணவில்லை. அவர்கள் பட்டினி கிடக்கிறார்கள்.

பற்றுக் குறையாக உள்ள உணவுப் பொருட்களின் விலைகளும் உச்சாணிக் கொம்புக்கு ஏறிவிட்டன. இதன் காரணமாக மக்களின் வாழ்க்கைச் செலவு உயர்ந்து விட்டது.

உணவுப் பிரச்சினையைப் போல வேலையில்லாப் பிரச்சினையும் இன்று விஸ்வரூபம் எடுத்து விட்டது.

இந்தப் பிரச்சினையெல்லாம் தீர்ப்பதற்கு இந்த அரசாங்கத்திடம் நல்ல பொருளாதாரக் கொள்கை கிடையாது. நல்ல பொருளாதாரக் கொள்கையை உருவாக்கி அதை அமுல் நடத்தும் திறமையும் இந்த அரசிடம் இல்லை.

ஐ. தே. க. தான் சிறந்த பொருளாதாரக் கொள்கையுடன் மக்கள் முன் வருகிறது. சிறந்த பொருளாதாரக் கொள்கையை அமுல் நடத்தி, பிரச்சினைகளைத் தீர்த்து, நாட்டை இன்றைய இக்கட்டான நிலையிலிருந்து விடுவித்து நாட்டு மக்களுக்கு விமோசனம் அளிக்கும் தகுதியும் திறமையும் திரு. ஜே.ஆர். ஜயவர்த்தன தலைமையிலான ஐ.தே.க.வுக்குத்தான் உண்டு.

வேலையில்லாத காரணத்தால் இன்று இளைஞர்கள் வெறுப்பும் விரக்தியும் அடைந்திருக்கிறார்கள். இளைஞர்கள் தாமும் நன்கு வாழ்ந்து நாட்டையும் வாழ்விப்பதற்கு வழி செய்து கொடுக்கச் சரியான தலைமை வேண்டும். ஐ. தே. க. விடந்தான் அது உண்டு. இந்த அரசாங்கத்திடம் சிறந்த கொள்கையோ தலைமையோ கிடையாது.

திரு. ஜே.ஆர். ஜயவர்த்தன தலைமையில் ஐ. தே. க. அரசாங்கத்தை அமைத்ததும்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## முதலாளிகளை ஒழித்தால் மட்டுமே சோஷலிஸ அரசை உருவாக்கலாம்

### — விவியன

முதலாளிகளின் பிடியிலிருந்து நாட்டை விடுவித்தால் மட்டுமே சோஷலிஸ அரசாங்கத்தை ஸ்தாபித்து மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க முடியும் என்று தெஹிவளை-கல்கிசை எம். பி. திருமதி விவியன் குணவர்த்தன கூறினார்.

அவிசாவளைத் தொகுதியிலுள்ள புவாக்பிட்டியாவில் நடைபெற்ற சமசமாஜப் பொதுக் கூட்டத்தில் திருமதி விவியன் குணவர்த்தன பேசினார்.

அவர் தமது பேச்சில் மேலும் குறிப்பிட்டதாவது:-

முதலாளிகள் இன்று பல்கிப் பெருகி இருக்கிறார்கள். அவர்கள் மக்களைச் சுரண்டித் தாம் கொழுத்த பணக்காரர்கள் ஆகிறார்கள். இதையெல்லாம் இந்த அரசு விட்டுவைத்திருக்கிறது.

போகம்பரையில் மக்கள் முன்னிலையில் ஐக்கிய முன்னணியின் கூட்டு ஒப்பந்தத்தில் தற்போதைய ஆட்சியாளர்களும் கையொப்பமிட்டார்கள். 1956 இல் ஆரம்பிக்கப்பட்ட சோஷலிஸப் பாதையில் தொடர்ந்து சென்று தொழிலாளர்களதும் விவசாயிகளதும் நலன்களைப் பேணுவது என்று அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டது.

இந்த அரசாங்கம் அந்தக் கூட்டு ஒப்பந்தத்தை மறந்து விட்டது. அத்துடன் அது நின்றுவிடவில்லை. மக்களுக்கு அளித்த வாக்குறுதியையும் அது மறந்து விட்டது.

நெற்காணிச் சட்டம், பஸ் சேவை தேசிய மயம். வீட்டு உடைமை உச்சவரம்பு, வருமான உச்சவரம்பு, மூலதன வரி - இவையெல்லாம் முதலாளிகளுக்குப் பெரிய அடியாக அமைந்தன. முதலாளிகளுக்கு அடிக்கு மேல் அடி விழத் தொடங்கியது. அவர்கள் அரசாங்கத்தின் மீது தமது ஆதிக்கத்தைச் செலுத்தி சமசமாஜக் கட்சியை அரசாங்கத்திலிருந்து அகற்றுவதற்கு முயற்சி செய்தார்கள். அதில் அவர்கள் வெற்றியும் கண்டார்கள்.

அரசாங்கம் இப்போது முதலாளிகளுக்கு அடிபணியத் தொடங்கி விட்டது. ஆயின் சோஷலிஸ ஆட்சி நடத்துவது எப்படி? தொழிலாளர்களதும் விவசாயிகளதும் நலன்களைப் பெறுவது எப்படி?

இந்த அரசாங்கத்துக்கு இந்நாட்டு மக்களில் உண்மையான அக்கறை உண்டானால், சோஸலிஷப் பாதையில் நாட்டை முன்னேற்ற வேண்டும் என்ற ஆர்வம் இருக்குமானால் அது நாட்டை முதலாளிகளின் பிடியிலிருந்து மீட்க வேண்டும். அவர்கள் மக்களைச் சுரண்டுவதை ஒழிக்க வேண்டும். இப்படி அவர் கூறினார்.

அவிசாவளை சமசமாஜக் கட்சி அமைப்பாளர் திரு. சந்தியபால குமாரகே பேசுகையில் தொழிலாளர்களதும் இடதுசாரி இயக்கங்களினதும் உதவியுடனும் ஆதரவுடனும் பாராளுமன்றத்துக்கு வந்த அமைச்சர் இலங்கரத்தின போன்றவர்கள் கூட தொழிலாளரையும் இடதுசாரி இயக்கங்களையும் மறந்து முதலாளிகளிடம் சென்று கூதல் காய்கிறார்களே என்றார்.

## மக்கள் குரல்

### எய்தவனைவிட்டு அம்பைநோவதா?

குதிரைப் பந்தயம் இந்த நாட்டிலேயே கொழும்பிலும் நுவரெலியாவிலும் காலியிலும் ஒரு காலத்தில் நடந்தது. அரசாங்கம் அதை நிறுத்திவிட்டது.

ஆயினும் வெளிநாடுகளில் குதிரைப்பந்தயம் நடக்க அதற்கு இங்கே உள்ளவர்கள் பணம் கட்டி வந்தார்கள்.

அதையும் அரசாங்கம் ஒரு காலத்தில் நிறுத்திவிட்டுப் பின்னர் சட்டபூர்வமாக அதற்கு அனுமதி வழங்கியது. இப்போது மீண்டும் தடை விதிக்கப்பட்டு விட்டது.

பந்தயத்துக்குப் பணம் ஏற்கும் புக்கிகள் மீது வேட்டை நடத்துவதாகக் கூறிக் கொண்டு பொலிஸார் என்ன செய்கிறார்கள்?

பந்தயப் பணத்தைச் சேகரித்துக்கொண்டு போய் புக்கிகளிடம் கொடுக்கும் ஏஜண்டுகளையும் பணம் கட்டும் பொது மக்களையும் தான் பொலிஸார் பிடித்து நீதிமன்றத்தில் நிறுத்தித் தண்டனை வாங்கிக் கொடுக்கிறார்கள். பெரிய புள்ளிகளான புக்கிகள் ஒரு தொல்லையும் இல்லாமல் தொடர்ந்து தொழிலைச் செய்கிறார்கள்.

புக்கிகளை விட்டு, பணம் கட்டுபவர்களையும் அதை வாங்கிக் கொண்டு போய் புக்கிகளிடம் கொடுப்பவர்களையும் பொலிஸார் கைது செய்வதும் அவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுப்பதும் எய்தவன் இருக்க அம்பை நோவது போன்ற செயல் அல்லவா?

புக்கித் தொழில் சம்பந்தப்பட்ட விஷயத்தில் அரசாங்கத்திடம் ஒரு திட்டவட்டமான கொள்கை இருப்பதாகத் தெரியவில்லை.

சரியோ, பிழையோ - நல்லதோ, கெட்டதோ புக்கித் தொழிலால் இன்று நாட்டில் உள்ள பல்லாயிரக் கணக்கானோர் பிழைக்கிறார்கள். அவர்களின் வயிற்றில் அடிப்பதானால் அவர்களுக்கு வேறு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும்.

புக்கிகளை முன்போல் சட்டபூர்வமாக்கி விட்டால் எவருடைய பிழைப்புக்கும் ஆபத்து வராது. அதே வேளையில் அரசாங்கத்துக்கும் நல்ல வருமானம் கிடைக்கும்.

இதுபற்றி அரசாங்கம் சிந்தித்து ஆவன செய்யுமா?

எஸ். ஞானச்சந்திரன்,

கொழும்பு.

### ஒரு சதத்துக்கு மதிப்பில்லை

இன்றைய ஆட்சியில் ஒரு சதத்துக்கு அறவே மதிப்பில்லை. எந்த ஒரு பொருளையும் இன்று ஒரு சதத்துக்கு வாங்க முடியாது. ஆகவே ஒரு சத நாணயம் என்தான் புழக்கத்துக்கு விடப்பட்டிருக்கிறதோ தெரியவில்லை.

முன்னர் ஐ. தே. க. ஆட்சியில் ஒரு சதத்துக்கு ஒரு றஸ்க்கோ அல்லது லொசிஞ்சரோ தேசிக்காய் போன்ற மரக்கறி வகைகளோ கிடைத்தன. இன்று இவை கூட ஆனை விலை குதிரை விலை விற்கின்றன.

ஆட்சி மாற்றம் எத்தனை கொடுமைகளைத்தான் இழைத்து விட்டது?

எ. அஷ்றப்,

அ. ரவி,

கொள்ளுப்பிட்டி.

# தடையை நீக்கியதாலேயே அரிசியின் விலை குறைந்தது என்று அரசே ஒப்புக்கொள்கிறது

## இந்த விஷயத்தில் ஐ.தே.க. நடத்திய போராட்டத்தின்

### பயனை நாடு இன்று அனுபவிக்கிறது

அரிசியை ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்துக்கு கொண்டு செல்வதற்கும் அதை எவரும் வைத்து விற்பதற்கும் இருந்த தடையை நீக்க வேண்டும் என்று ஐ. தே. கட்சி நடத்திய போராட்டம் காலக்கிரமத்தில் வெற்றி அளித்தது வாசகர்கள் அறிந்ததே.

அந்த வெற்றியின் பயனை இந்த நாட்டு மக்கள் இப்போது அனுபவிக்கிறார்கள். அரிசித் தடை நீக்கப்பட்டதிலிருந்து அரசியின் விலை குறைந்து கொண்டு வருகிறது. மாவின் உபயோகமும் பெருமளவில் விழுந்து விட்டது.

அரிசி விலை குறைந்ததற்கும் மாவின் உபயோகம் விழுந்ததற்கும் அரிசித் தடை நீக்கமே முக்கிய காரணம் என்பதை அரசாங்கமே இப்பொழுது ஒப்புக் கொள்கிறது.

அரிசியில் நாடு தன்னிறைவு காணக்கூடிய அளவுக்கு இங்கே நெல் விளைச்சல் அதிகரிக்க வில்லை. அரசாங்கத்தின் அதிக உணவு உற்பத்தித் திட்டம் படுதோல்வி அடைந்து விட்டது. கூப்பனுக்கு அரிசி வழங்க இன்னும் வெளிநாட்டு இறக்குமதியையே ஏம்பியிருக்க வேண்டியுள்ளது.

அப்படியிருந்தும் நாட்டிலே அரிசி விலை குறைந்து விட்டது என்றால் தடை நீக்கப்பட்டதும் இதையடுத்து அரிசி விற்பனையில் தனியார் வர்த்தகர்களிடம் ஏற்பட்டுள்ள போட்டியுமே அதற்குக் காரணங்கள் ஆகும்.

அரிசித் தடைச் சட்டம் அமுலில் இருந்தபோது யாழ்ப்பாண மாவட்டத்திலும் மற்றும் சில இடங்களிலும் ஒரு கொத்து அரிசி பத்து ரூபாவுக்கு மேல் விற்றதும் உண்டு. இன்று அரிசியின் விலை ரூபா 2.25 முதல் ரூபா 2.50 ஆகக் குறைந்து விட்டது.

எந்த ஒரு பொருளின் விற்பனைக்கும் கட்டுப்பாடு இல்லாமல் இருந்தால் அது மார்க்கட்டில் தாராளமாகக் கிடைக்கும். பதுக்கல் இருக்காது. வர்த்தகர்கள் போட்டி போட்டுக் குறைந்த விலைக்கு அந்தப் பொருளை விற்பார்கள். இந்த விஷயம் அரிசியிலிருந்து நன்கு புலனாகிறது.

அரிசி குறைந்த விலைக்குத் தாராளமாகக் கிடைக்க வேண்டும். நாட்டு மக்கள் எந்த விதமான கஷ்டமும் இல்லாமல் வேண்டியளவு அரிசியை வாங்கும் நிலைமை ஏற்பட வேண்டும், அதற்குரிய ஒரே வழி அரிசித் தடையை நீக்குவதுதான் என்பதை ஐ தே. கட்சி முன் கூட்டியே உணர்ந்து கொண்டதாலேயே தீர்க்க ஆலோசனையுடன் போராட்டம் நடத்தி அரிசித் தடை நீக்கத்துக்கு வழி செய்தது.

அரிசித் தடையை நீக்கினால் அரிசி குறைந்த விலைக்குத் தாராளமாகக் கிடைக்கும் நிலைமை தோன்றும் என்பதை இன்றுதான் இந்த அரசு அனுபவ ரீதியாக அறிகிறது. உணர்கிறது.

அரிசி மட்டுமல்லாமல் மற்றப் பொருட்களையும் குறைந்த விலைக்கு மக்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டுமானால் அந்தப் பொருட்களின் இறக்குமதிக்கு இப்போதுள்ளது போன்ற கடும் கட்டுப்பாடு இருக்கக் கூடாது.

எல்லாவற்றையும் தானே இறக்குமதி செய்து தனிப்பட்ட வர்த்தகர்களுக்குக் கொடுத்து அவற்றையே விற்பனை செய்யுங்கள் என்று விட்டால் விலை உயர்வு தவிர்க்க முடியாதது ஆகும். அதற்கு மாறாக தனிப்பட்ட வர்த்தகர்களையும் பொருட்களை இறக்குமதி செய்து விற்க விட்டால் அவர்கள் பொருட்கள் மலிவாகக் கிடைக்கும் இடங்களைத் தேடிப் பிடித்து அங்கிருந்து பொருட்களை இறக்குமதி செய்து போட்டி போட்டுக் கொண்டு குறைந்த விலைக்கு விற்பார்கள். இந்தப் புத்தி இந்த அரசாங்கத்துக்கு எப்பொழுதுதான் பிடிபடுமோ!

அரிசியைப் பொறுத்த வரையில் அதன் விலை குறைந்து விட்டதால் மக்களிடையே மாவின் உபயோகம் பெருமளவு குறைது விட்டதாக உணவு ஆணையாளர் கூறுகிறார். கடந்த வருடத்துக் கணக்குகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது மாதத்தில் 8000 தொன் மா குறைவாகவே இப்போது விற்பனையாகிறது என்கிறார் உணவு ஆணையாளர்.

வெளிமார்க்கட்டில் அரிசியின் விலை குறைந்து விட்டதே இதற்கான காரணம் என்று உணவு ஆணையாளர் வெளிப்படையாகக் கூறுகிறார்.

ஐ. தே. க.வின் போராட்டத்தை அடுத்து அரசாங்கம் அரிசித் தடையை நீக்கியதற்கு சேர்ட்டிபிக்கட் கொடுத்த மாதிரி இருக்கிறது அல்லவா இது?

## ஜே. ஆர். ஒருவர்தான் நாட்டின் பிரச்சினைகளை தீர்க்கக் கூடியவர்

**— ஹேனி டி மெல்**

இந்த நாட்டின் ஒரே ஒரு நேர்மையான அரசியல் கட்சியான ஐ. தே. கட்சிக்கு தலைமைதாங்கும் திரு ஜே. ஆர். ஜயவர்த்தன ஒருவரால்தான் தேசியப் பிரச்சினைகள் சகலத்தையும் தீர்க்க முடியும். அவர்தான் அதற்கான தகுதியும் திறமையும் உடையவர். இப்படி தெவினுவர எம். பி. திரு ஹேனி டி. மெல் கூறினார்.

காலி முஸ்லிம் சமூகத்தின் மத்திய ஐ. தே. க. அமைப்பால் காலி தனிப் பொல்கஹ சந்தியில் ஏற்பாடு செய்யப்பட்ட பொதுக் கூட்டத்தில் திரு. ஹேனி டி மெல் பேசினார். கூட்டத்துக்கு முன்னாள் தொழில் அமைச்சர் ஜனாப் எம். எச். முகம்மது தலைமை தாங்கினார்.

திரு. ஹேனி டி மெல் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

சுதந்திரக் கட்சியில் ஊழல் நெளிகிறது. அந்தக் கட்சி நிலச் சொந்தக்காரர்களதும், இரத்தினக்கல் வியாபாரிகளதும் குதிரைப்பந்திய முதலாளிகளதும் நலன்களைப் பேணிப் பாதுகாக்கும் கட்சியாக மாறி விட்டது.

வீட்டு உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டு வந்துவிட்டதாக இந்த அரசு கொக்கரித்தது. அந்தச் சட்டம் பொது மக்களின் கண்களில் மண்ணைத் தூவுவதற்கே கொண்டு வரப்பட்டது.

ஆகவே இந்நாட்டு மக்கள் அனைவரும் – சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், மலாயர்கள் பறங்கியர்-இந்த ஊழல் அரசாங்கத்தைத் தோற்கடித்து நல்லதொரு அரசை உருவாக்குவதற்கு ஐ. தே. க. வுக்கு ஆதரவளித்து திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும்.

அரசாங்கத்தில் உள்ள சில பெரும் புள்ளிகள் குறித்தபடி 1977 இல் பொதுத் தேர்தல் நடைபெறாது என்று சொல்லத் தொடங்கி விட்டார்கள். மக்கள் முன் சென்று வாக்குக் கேட்பதற்கு அஞ்சுவதாலேயே அவர்கள் பொதுத் தேர்தலைப் பின்போடுவிக்கப் பார்க்கிறார்கள்

இவர்கள் உண்மையில் நாட்டுக்கு நன்மை செய்திருந்தால் நேர்மையாக மக்களுக்குத் தொண்டாற்றியிருந்தால் ஏன் அவர்களிடம் போய் வாக்குக் கேட்க அஞ்ச வேண்டும்? பொய் வாக்குறுதிகளால் மக்களை ஏமாற்றி அதிகாரத்தில் இருந்து சுகபோகம் அனுபவித்தவர்கள் இப்போது மக்களிடம் திரும்பிப் போனால் அவர்கள் தம்மை உதைத்துத் தள்ளுவார்கள் என்று அஞ்சுவதில் அர்த்தம் உண்டு. அவரவர் தாம் தாம் செய்யும் நல்வினை தீவினைக்கு ஏற்ப அனுபவித்தே ஆகவேண்டும்.

ஆகவே சுதந்திரத்தை விரும்பும் இந்த நாட்டின் மக்கள் அனைவருக்கும் எதிர்க் கட்சிகளுக்கும் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். அடுத்த பொதுத் தேர்தலை அரசாங்கம் 1977 இல் நடத்தாவிட்டால் அஹிம்சைப் போராட்டம் நடத்தத் தயாராகுமாறு வேண்டிக் கொள்கிறேன். இப்படி அவர் கூறினார்.

ஜனாப் எம். எச். முகம்மது தமது தலைமை உரையில் இன்றைய இளைஞர்களின் இக்கட்டான நிலையை எடுத்து விளக்கினார்.

வேலையற்று, வாழவழியற்று, வெறுப்பும் விரக்தியும் கொண்டு சோம்பிருக்கும் இன்றைய இளைஞர்களுக்கு இந்த ஆட்சியில் விமோசனம் இல்லை.

திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவின் தலைமையில் புதிய கொள்கையுடனும் புதிய வேலைத் திட்டத்துடனும் நாட்டு மக்கள் முன் புதுப் பணியாற்ற காத்திருக்கும் ஐ. தே. க. தான் இளைஞர்களுக்கு வாழ்வளிக்கும் இதை இளைஞர்கள் இன்று பரிபூரணமாக நம்புகிறார்கள். கூட்டத்தில் பெரும் எண்ணிக்கையில் இளைஞர்கள் திரண்டிருப்பது இதையே காட்டுகிறது என்று ஜனாப் முகம்மது சொன்னார்.

## பிரிட்டிஷ் அரசிடமிருந்து இலங்கை அரசு நஷ்ட ஈடு கோரவேண்டும்

**— பிரின்ஸ்**

நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தால் பொறுப்பு ஏற்கப்பட்ட பிரிட்டிஷ் ஸ்டேர்ளிங் கம்பனி எதற்கும் ஒரு சதம் கூட நஷ்ட ஈடாகக் கொடுக்கக் கூடாது. பிரிட்டிஷ் அரசிடமிருந்து இலங்கை அரசு நஷ்ட ஈடு கோர வேண்டும் என்று ஹபரதுவ எம். பி. திரு. பிரின்ஸ் குணசேகரா தேசிய அரச பேரவையில் அரசாங்கத்தை வற்புறுத்தினார்.

மேற்படி கம்பனிகளுக்கு நஷ்டஈடு கொடுக்கப்பட்டால் சம்பந்தப்பட்டவர்கள் நாட்டு மக்களுக்குப் பதிலளித்தாக வேண்டும் என்றும் அவர் எச்சரிக்கை செய்தார்.

அவர் மேலும் கூறியதவது:-

ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச பொருளாலார அமைப்பில் இலங்கையும் பிரிட்டனும் அங்கத்துவம் வகிக்கின்றன. இந்த நிலையில் பிரிட்டிஷ் ஸ்டேர்ளிங் கம்பனிகளுக்கு நஷ்டஈடு கொடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் ஒப்புக்கொள்வதா? அதுவும் இந்த நாட்டு மக்களிடமிருந்து காணிகளைப் பறித்து 150 ஆண்டுகளாக அந்தக் காணிகளிலிருந்து கிடைத்த பயனை அனுபவித்து வந்த கம்பனிகளுக்கு, இந்த நாட்டு மக்களைச் சுரண்டி வாழ்ந்த கம்பனிகளுக்கு நஷ்டஈடு கொடுப்பதா?

கண்டிப் பகுதிகளில் உள்ளவர்களிடமிருந்து பிரிட்டிஷார் முன்காலத்தில் காணிகளை ஏக்கர் ஒன்று ரூபா 50.00 படி வாங்கினார்கள். இன்று அரசாங்கம் ஏக்கர் ஒன்றுக்கு ரூபா 750.00 (42 50 பவுண்) நஷ்டஈடாகக் கொடுக்கப் போகிறது. இது தவறு. உண்மையில் இலங்கை அரசாங்கமே பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து நஷ்டஈடு கோர வேண்டும். ஏனெனில் பிரிட்டிஷார் எங்கள் காணிகளைச் சூறையாடி விட்டார்கள். இப்படி அவர் கூறினார்.

## யானையின் பதில்கள்

ஏ. எம். ஜாரியாபேசம், கிண்ணியா.

கே: எங்கள் பகுதியில் ஓடும் இ. போ. ச. பஸ் வண்டிகள் கை காட்டினால் கூடத் தரிப்பு நிலையங்களில் நிற்பதில்லையே, ஏன்?

ப: பஸ் டிரைவர் அலட்சியமாக நடந்து கொள்கிறார் என்று தானே நீங்கள் குற்றஞ் சாட்டுகிறீர்கள்? உண்மை வேறாகவும் இருக்கலாம். இன்று தெருக்களில் ஓடும் இ. போ. ச. பஸ்களில் பலவற்றிற்கு பிரேக் கூடக் கிடையாது. அவற்றை நிற்பாட்ட வேண்டுமானால் டிரைவர் ஆளிலோ, மரத்திலோ, சுவரிலோ மோதித்தான் நிற்பாட்டுவது வழக்கம். கிண்ணியாவில் ஓடுவதும் இப்படியான பஸ்களாய் இருக்கலாம்.

எச். எம். சாஹுல் ஹமீத், கிண்ணியா.

கே: நான் ஒரு கனவு கண்டேன். நாட்டில் ஐ. தே. க ஆட்சி செய்கிறது. கிண்ணியாப் பிரதிநிதியாக ஜனாப் மகரூப் விளங்குகிறார்? இது நடக்குமா?

ப: அப்படியானால் அடுத்த பொதுத் தேர்தலில் அப்துல் மஜீத் கவிழ்ந்து விடுவார் என்று நீங்கள் சொல்லாமல் சொல்கிறீர்கள். இந்த முடிவை அறிவதற்கு கனவு காண வேண்டியதில்லை. மூதூரில் நிலவும் வெகுஜன அபிப்பிராயமே யானைவரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே என்பதை அறிவிக்கின்றதே.

ஏ. எஸ். ஏ. அஹம்மது பாரி, வேருவளை.

கே: நமது ஊர்ப்பக்கத்தில் சகல பொருள்களுக்கும் தட்டுப்பாடாக இருக்கிறதே மக்களுக்குப் பொருள் வகைகள் கிடைப்பதற்கு வழியென்ன?

ப: இன்றைய ஆட்சியில் ஒரு தொகுதியின் பொருள் தட்டுப்பாடு நீங்க வேண்டுமானால் அத்தொகுதியில் ஓர் உப தேர்தல் ஏற்படவேண்டும். தேர்தல் முடியும் வரை அங்கு சகல பொருள்களையும் கொட்டி நிரப்பிவிடும் அரசாங்கம். கட்டாளையிலும், கலவேவாவிலும் இப்படித்தான் நடந்தது. இப்போது ஜா – எலை மக்களுக்கு அதிர்ஷ்டம் அடித்திருக்கிறது எப்படித்தான் பொருள் விநியோகம் செய்தாலும் வெற்றி கிடைப்பது ஐ. தே. கட்சிக்குத்தான்.

மீனும்பிகை சுப்பிரமணியம், நல்லூர்.

கே: அரசாங்கத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகள் சிலர் கமகம என்று வாசனை வீசும் செண்டைச் சதா பூசிக் கொள்கிறார்களே, ஏன்?

ப: அவர்களைச் சுற்றி சதா வீசிக் கொண்டிருக்கும் இலஞ்ச, இலாவண, ஊழல் நாற்றம் பொது மக்களுடைய மூக்கில் பட்டுவிடக் கூடாது என்பதற்காக.

க. இராமச்சந்திரன், மட்டக்களப்பு.

கே: அரசாங்கம் சாராயத் தவறணைகளை நடத்தப் போகிறதாமே!

ப: பிறர் நடத்தும் போதே அரசாங்க அங்கத்தவர்கள் தள்ளாடுகிறார்கள். இனி அரசாங்கமே நடத்துவதானால் அவர்கள் வாந்தியைக் கூடப் பொது மக்கள் சகித்துக் கொள்ள வேண்டியதுதான்.

பி. சுந்தரமூர்த்தி, கண்டி

கே: தம் கட்சி அங்கத்தவரிடையே சொல்லப்படும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கு எம்.ஜி.ஆர் ஒரு தனி மனிதன் விசாரணை "சபை"யை நியமித்திருக்கிறாரே, இது ஒரு நல்ல முன் மாதிரி அல்லவா?

ப: மிகச் சிறந்த முன் மாதிரி தான். அந்த விசாரணை 'சபை'யின் முன்னால் எம் ஜி. ஆர். தம்மைத் தாமே ஆஜர் செய்து கொள்வது நல்லது. பலவிதமான கறுப்புப் பணக் கொடுக்கல் வாங்கல், உலகம் சுற்றும் வாலிபன் செலாவணி மோசடி, வருமான வரி கள்ளக் கணக்கு, சத்யா ஸ்டுடியோ விவகாரம் இப்படி ஏகப்பட்ட ஊழல்கள் அவர் மீது சுமத்தப் பட்டுள்ளன. இவற்றிலிருந்து அவர் முதலில் விடுபட வேண்டும் அல்லவா?

கே. ஆர். கோணமலை, திருகோணமலை.

ப: பணக்காரர்கள் ஏன் ஏழைகளை மதிப்பதில்லை?

ப: கஷ்டப்பட்டுச் சம்பாதித்து நேர் வழியில் பணக்காரன் ஆனவன் எப்போதும் ஏழைகளை மதிக்கவே செய்கிறான். இன்றைய அரசாங்கத்தில் ஒட்டிக் கொண்டு குல்மால் வேலைகளாலும், கைலஞ்சத்தாலும், கண்டிராக்டாலும் பணக்காரர் ஆனவர்களுக்கு தலைகால் தெரிவதாக இல்லை. அவர்கள் தான் குதியாகக் குதிக்கிறார்கள். ஏழைகள் மீது குதிரைச் சவாரி செய்கிறார்கள். வாராது வந்த செல்வம் போகாது போய் விடும் அடுத்த பொதுத் தேர்தலின் பின். அப்போது சந்திப்போம் இந்தப் புதுப் பணக்காரர்களை.

கொழும்பு-12, ஹல்ஸ்டோர்ப் வீதி, 39-ம் இல்லத்தில் அமைந்துள்ள திலக அச்சகத்தில், கொழும்பு டாம் வீதி, 323-ம் இலக்கத்தில் வசிக்கும் சிறிசோம ரணசிங்கா என்பவரால் இப்பத்திரிகை 9—4—1976-ல் அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# லேக்ஹவுஸ் பத்திரிகைகளில் வாசிக்க என்ன இருக்கிறது?

## ஒரே விளம்பர மயம்!

## அரசு விசாரிக்க வேண்டும்

லேக்ஹவுஸ் பத்திரிகைகளில் பொது மக்கள் வாசிப்பதற்கு என்ன இருக்கிறது? எல்லாம் ஒரே விளம்பரமயமாகவே இருக்கிறது பணம் கொடுத்துப் பத்திரிகையை வாங்கும் பொது மக்கள் இப்படி ஏமாற்றப்படக் கூடாது. இது பற்றி அரசாங்கம் விசாரணை செய்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் இப்படி "டிரிபியூன்" என்ற ஆங்கில பத்திகை வற்புறுத்தியிருக்கிறது.

"டிரிபியூன்" சுட்டுரையின் சாரம் வருமாறு:-

இந்த நாட்டின் பழமை வாய்ந்த பத்திரிகைகளான லேக்ஹவுஸ் பத்திரிகைகளின் சொந்தக்காரர்களாக விஜயவர்த்தனக்கள் இருந்தார்கள். அவர்கள் தமது காலத்தில் லேக்ஹவுஸ் நிறுவனத்தைச் சீராக நடத்தி வந்தார்கள். பத்திரிகைகளில் 40 முதல் 45 சதவிகிதம் விளம்பரம் மட்டுமே இருக்குமாறு அவர்கள் பார்த்துக் கொண்டார்கள்.

அப்படி இருந்த போதும் பத்திரிகைகளில் விளம்பர விகிதம் அதிகமாக உள்ளதே என்று சதா குரல் எழுப்பட்டது. பத்திரிகைகளில் வாசிப்பதற்கு உரிய விஷயங்களைவிட விளம்பரங்களையேஅதிகமாகப் பிரசுரித்து மக்கள் ஏமாற்றப் படுகிறார்கள் என்று கண்டனமும் தெரிவிக்கப்பட்டது.

பத்திரிகைகளில் 25 சதவிகிதத்துக்கு மேல் விளம்பரங்கள் இருக்கக் கூடாது என்று கட்டுப்பாடு விதிக்க வேண்டும் என்று அப்போது வற்புறுத்தப் பட்டது.

கூட்டு முன்னணிக் கட்சிகள் அப்போது முன்னணியில் நின்று முதலாளித்துவப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப் படும் விளம்பரங்கள் வெகுவாகக் குறைக்கப்பட வேண்டும் என்று விடாப்பிடியாக நின்றன.

அந்த முதலாளித்துவப் பத்திரிகைகள் கூட்டு முன்னணி அரசாங்கத்தால் கையேற்கப் பட்டதும் விளம்பரங்கள் குறைக்கப்பட்டு வாசிப்பதற்குரிய விஷயங்கள் அதிகமாகப் பிரசுரிக்கப்படும் என்று மக்கள் நம்பினார்கள். கூட்டு முன்னணிக் கட்சிகள் தாம் முன்னர் உபதேசித்தை நடைமுறைப்படுத்திக் காட்டுவார்கள் என்றும் பொது மக்கள் எதிர்பார்த்தார்கள்.

ஆனால் அவர்கள் ஏமாந்தார்கள். பொதுமக்கள் எதிர்பார்த்ததற்கு எதிர்மாறாகவே காரியம் நடந்து வருகிறது விளம்பரங்கள் முன்னரை விட இப்போது கூடுதலாகப் பிரசுரிக்கப்படுகின்றன.

லேக்ஹவுஸில் நிர்வாகச் செலவுகள் அதிகரித்து விட்டன. உயர் மட்டத்தில் உள்ளவர்களின் சம்பளங்கள் உயர்த்தப்பட்டுள்ளன. இவற்றிற்கெல்லாம் ஈடுகொடுப்பதற்கு கூடுதலான வருமானம் தேவைப்படுகிறது. அதனால் விளம்பரங்களை அதிகமாகப் பிரசுரிக்கிறார்கள்.

பத்திரிகை அச்சடிக்கும் தாள் பற்றுக்குறையாக இருக்கிறது என்பதையும் பத்திரிகைத் தாளின் விலை உலக மார்க்கட்டில் உயர்ந்து விட்டது என்பதையும் காரணம் காட்டி பத்திரிகைகளின் பக்கங்களைக் குறைத்தும் அதே வேளையில் விலையைக் கூட்டியும் பொது மக்களைப் பேய்க் காட்டுகிறார்கள்.

விளம்பரக் கட்டணங்களும் மூன்று நான்கு மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளன.

எல்லாவற்றிற்கும் மேலாக இப்போது லேக்ஹவுஸ் பத்திரிகைகளில் 60 முதல் 70 சதவிகிதம் விளம்பரங்கள் பிரசுரிக்கப்படுகின்றன. சில சமயங்களில் 75 சதவிகிதத்துக்கு மேல் விளம்பரங்கள் பிரசுரிக்கப்படுவதும் உண்டு.

இரண்டு காலைத் தினசரிகளை ஒரு ரூபா கொடுத்து வாங்கினால் 10 நிமிஷங்கள் வாசிப்பதற்குக் கூட அவற்றில் "சரக்கு" இல்லை.

வெளிநாட்டுச் செய்திகள் வேண்டியளவு பிரசுரிக்கப்படுவதில்லை. வெளி உலகில் என்ன நடக்கிறது என்பது பற்றி இந்த நாட்டுப் பத்திரிகைகளுக்கு அக்கரை இல்லையா என்றே கேட்கத் தோன்றுகிறது. லேக்ஹவுஸ் பத்திரிகைகள் புதினப் பத்திரிகைகளாக அல்லாமல் வெறும் விளம்பரப் பஞ்சாங்கங்களாகவே வெளி வருகின்றன. பொது மக்கள் இப்படி ஏமாற்றப்படக் கூடாது. அரசாங்கம் உடனே விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படி "டிரிபியூன்" ஆங்கிலப் பத்திரிகை வற்புறுத்தியிருக்கிறது.

## ஜா-எல வேட்பாளர்....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும். சமுதாயத்தில் அவர்கள் பயனுள்ள பிரஜைகளாகத் திகழ வழி செய்யப்படும். அது மட்டுமல்லாமல் புதிய சோஷலிஸ சமுதாயத்தை அமைக்கும் பணியில் இளைஞர்கள் முன்னின்று உழைப்பதற்குச் சந்தர்ப்பமும் அளிக்கப் படும்.

இளைஞர்களின் சக்தியைத் திரட்டினால் தான் எந்தக் காரியத்தையும் வெற்றிகரமாகச் செய்ய முடியும். இளைஞர்களின் உதவியுடன் ஐக்கிய தேசியக் கட்சி அமைக்கும் புதிய சோஷலிஸ சமுதாயத்தில் மனிதனை மனிதன் சுரண்டும் கொடுமை இருக்காது. முதலாளி வர்க்கம் ஒழிக்கப் பட்டு விடும். ஊழல் மறைந்து விடும். மக்கள் அனைவரும் தேசிய செல்வத்தைப் பகிர்ந்து அனுபவித்து சந்தோஷமாகவும் சமாதானமாகவும் சுபீட்சமாகவும் வாழ்வார்கள். ஆகவே அனைவரும் ஐ.தே.க.வுக்கு ஆதரவு அளித்து அதை வெற்றி பெறச் செய்ய வேண்டும். இப்படி அவர் கூறினார்.

## பீலிக்ஸின் விளக்..

(1-ம் பக்கத் தொடர்)

(2) என்ன செலவில் எத்தனை பிரதிகள் அதில் அச்சிடப் பட்டன?

(3) பிரசுரத்தை வெளியிட்டவர் யார், அச்சுப் பதித்தவர் யார் என்ற விவரங்கள் சட்டப்படி பிரசுரத்தில் குறிப்பிடப்பட வேண்டும்: அந்த விவரங்கள் இந்தப் பிரசுரத்தில் குறிப்பிடப்படாதது ஏன்?

இந்தப் பிரசுரத்தில் அதை வெளியிட்டவர் பெயரும் அச்சுப் பதித்தவரின் பெயரும் இல்லாததால் இது சட்ட விரோதமான பிரசுரம் என்று நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்தின் போது சுட்டிக் காட்டிக் கண்டனம் தெரிவித்த முதல் எம். பீ. ஹபரதுவை எம். பி. திரு. பிரிஸ்ன் குணசேகரா என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

அரசியல் செய்திகளுக்கு நம்தேசம்